

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 94 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 28 – வெள்ளிக்கிழமை 14 நவம்பர் 2025 – வெளியூர் 12 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 94: Thiruvalluvar Year - 2056 - Ayppasi 28 - Friday 14 November 2025 - Dak 12 + 8 Pages ₹ 5.00


## அகவிலைப்படி 3 சதவிகிதம் அதிகரிப்பு - 16 லட்சம் பேர் பயனடைவர்!

# தமிழ்நாடு அரசு அலுவலர்கள் - ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, நவ.14-**

**“தமிழ்நாடு அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 55 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 01.07.2025 முதல் 58 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும்” - என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து வெளியான அரசின் செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டு மக்கள் நலனில் அன்பும் அக்கறையும் கொண்டு பல சீரிய முன்னோடி நலத் திட்டங்களைத் தீட்டி தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது. மக்களுக்காக வகுக்கப்படும் பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டுவதிலும், அத்திட்டங்களை முழுமையாக மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் களப்பணியாற்றுவதிலும் முக்கியப் பங்கு வகிப்பவர்கள் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள்.

அத்தகைய அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை இவ்வரசு கருத்தில் கொண்டு, மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன் பெறும் வகையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 01.07.2025 முதல் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் ஒன்றிய அரசு அறிவித்துள்ள அகவிலைப்படிக்கு இணையாக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார். இதனால் தற்போது 55 சதவீதமாக உள்ள அகவிலைப்படி, 3 சதவீதம் உயர்த்தப்பட்டு 01.07.2025 முதல் 58 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ரூபாய் 1829 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். அரசு அலுவலர்கள்/ ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நன்றி!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அகவிலைப்படியை 55 சதவிகிதத்திலிருந்து 58 சதவிகிதமாக உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டவுடன், அரசு அலுவலர்கள் சங்கங்களும், ஆசிரியர் சங்கங்களும் முதல்வருக்கு நன்றி தெரிவித்து அறிக்கை வெளி யிட்டுள்ளன.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், சாத்தூர் மற்றும் போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

### சட்டமன்றத் தேர்தல்:

## பீகாரில் இன்று வாக்கு எண்ணிக்கை!

### பிற்பகலுக்குள் முடிவுகள் தெரியும்!

**பாட்னா, நவ.14-**

**பீகார் சட்டமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படும் நிலையில், வாக்கு எண்ணும் மையங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

243 சட்டமன்ற தொகுதிகள் கொண்ட பீகார் மாநிலத்திற்கு இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. கடந்த 6 ஆம் தேதி 121 தொகுதிகளுக்கும், கடந்த செவ்வாய்க்கிழமை 122 தொகுதிகளுக்கும் வாக்குப்பதிவு நடைபெற்றது. இரு கட்டங்களிலும் சேர்த்து இதுவரை இல்லாத அளவில், 66.91 சதவீத வாக்குகள் பதிவாகின.

இந்த நிலையில், பீகார் தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன. இன்று காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது. இன்று பிற்பகலுக்குள் முடிவுகள் தெரிந்துவிடும். வாக்கு எண்ணிக்கை நடைபெறும் 46 மையங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த மையங்களில் மத்திய ஆயுதக்காவல் படை மற்றும் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்கு ஒப்புகைச் சீட்டு கருவிகள் சீலிடப்பட்டு, பாதுகாப்பான அறைகளில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை முசாபர்பூரில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு அறையில் திடீரென சிசிடிவி கேமராக்கள் அணைத்து வைக்கப்பட்டன. இது தொடர்பான வீடியோ ஆதாரங்களை சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டிருக்கும் ராஷ்ட்ரிய ஜனதாதளம் கட்சி, இதுபோன்ற தகவல்கள் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளது.

இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையம் கவனம் செலுத்தாதது ஏன்? என்றும், அல்லது சிசிடிவி கேமராக்கள் திட்டமிட்டு அணைக்கப்படுகிறதா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளது. பிரதமர் மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் முழு கவனமும் பீகார் தேர்தல் வாக்கு எண்ணிக்கையில் மோசடி செய்வதில் இருப்பதாகவும், அவர்கள் தேச பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு பாதுகாப்பை கைவிட்டு விட்டதாகவும் குற்றம்சாட்டியுள்ளது.

## பீகாரில் வாக்கு எண்ணும் மையங்களுக்கு வரும் மர்ம வாகனங்கள்!

### எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு!

*பாட்னா, நவ.14-*

*பீகாரில் வாக்கு எண்ணும் மையங்களில் சந்தேகத்திற்குரிய வாகனங்கள் செல்வதாகவும், சிசிவிடி கேமராக்கள் இயங்கவில்லை என்றும் எதிர்க்கட்சிகள் பரபரப்பு குற்றம் சாட்டியுள்ளன.*

*பீகார் மாநிலத்தில் சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன. இந்த நிலையில், வாக்கு எண்ணிக்கை நடைபெறும் 46 மையங்களில் தீவிரமான பாதுகாப்பு பிரச்சனை இருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. பாகல்பூர், முசாபர்பூர் உள்ளிட்ட பல்வேறு வாக்கு எண்ணிக்கை மையங்களில் சிசிடிவி கேமராக்கள் இயங்கவில்லை என்றும் புகார் கூறியுள்ளன.*

*தேர்தல் முடிந்து 30 மணி நேரத்துக்கு பிறகு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள மையங்களில் வாகனங்கள் சென்று வருவதாக தெரிவித்துள்ளன. சாசாரம் தொகுதியில் நள்ளிரவில் வாக்குப்பதிவு சாதனங்களுடன் வந்த லாரியை எதிர்க்கட்சிகள் முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.*

*இதனிடையே, பீகார் வாக்கு பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள மையங்களில் இரவு முழுவதும் பதட்டமான சூழல் நிலவியது. பல இடங்களில் சி.சி.டி.வி காமிராக்கள் இயங்கவில்லை. நள்ளிரவில் காலிப்பெட்டிகள் கொண்டுவந்த மர்மம் என்ன? என்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பி உள்ளனர்.*

*இந்நிலையில், எதிர்ப்பு தெரிவித்த கட்சியினர் மீது போலீசார் தாக்குதல் நடத்தியதாக புகார் கூறப்பட்டுள்ளது. இன்று வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ள நிலையில், தீவிர கண்காணிப்பில் இருக்க வேண்டும் என்று ராஷ்டிரிய ஜனாதளம் கட்சியினருக்கு கட்சி மேலிடம் உத்தரவிட்டுள்ளது.*

### இந்தியாவிலேயே முதன் முதலாக ரூ.40 கோடியில்

# மகளிர் நல்வாழ்விற்காக 38 நடமாடும் ஊர்திகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு பாராட்டு!

**சென்னை, நவ.14-**

**புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு திட்டத்தின் கீழ், மகளிர் நல்வாழ்விற்காக வடிவமைக்கப்பட்டுள்ள நடமாடும் மருத்துவ ஊர்தியை பார்வையிட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக 196 உதவியாளர் மற்றும் 18 வட்டார சுகாதார புள்ளியியலாளர் பணியிடங்களுக்கும், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 19 திறன்மிகு உதவியாளர்II (பொருத்துநர்- II) பணியிடங்களுக்கும் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர். மு.க.ஸ்டாலின் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.11.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக 196 உதவியாளர் மற்றும் 18 வட்டார சுகாதார புள்ளியியலாளர் பணியிடத்திற்கும், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 19 திறன்மிகு உதவியாளர்II (பொருத்துநர்- II) பணியிடங்களுக்கும் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

மேலும், புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு திட்டத்தின் கீழ், மகளிர் நல்வாழ்விற்காக 40 கோடி ரூபாய் செலவில் 38 நடமாடும் மருத்துவ ஊர்திகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. டிஜிட்டல் மேம்மோகிராபி, ECG கருவி, செமிஆட்டோ அனலைசர் (Semiautoanalyser) உட்பட பல வசதிகளுடன் 1.10 கோடி ரூபாய் செலவில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த நடமாடும் மருத்துவ ஊர்தியை பார்வையிட்டார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், நவீன மருத்துவக் கருவிகளை நிறுவுதல், காலிப் பணியிடங்களை நிரப்புதல், தமிழ்நாட்டில் உள்ள அனைவருக்கும் குறிப்பாக ஏழை எளிய மக்கள் நலவாழ்வு பெறவேண்டும் என்கிற உயரிய நோக்கில் அவர்களின் இல்லங்களுக்கே சென்று மருத்துவ சிகிச்சை அளித்திடும் “மக்களைத் தேடி மருத்துவம்”, சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் “இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும்48”, சிறப்பு மருத்துவ சேவைகளை மக்கள் குடியிருக்கும் பகுதிகளுக்கே கொண்டு செல்லும் “நலம் காக்கும் ஸ்டாலின்” மருத்துவ முகாம்கள் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, மருத்துவத் துறையில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கி வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 4,576 உதவி மருத்துவர்கள், 48 பல் மருத்துவர்கள், 27 மாற்றுத்திறனாளி செவிலியர்கள், 2,810 இதர மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் உள்ளடக்கிய 7,413 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 555 உதவியாளர் பணியிடங்கள், 584 இளநிலை உதவியாளர் பணியிடங்கள், 187 தட்டச்சர் பணியிடங்கள் மற்றும் 314 சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை3 பணியிடங்கள் நிரப்பப்பட்டு, பணிபுரிந்து வருகின்றனர்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

### நாடாளுமன்றக் கூட்டுக்குழு : ‘இந்தியா’ கூட்டணி புறக்கணிப்பு!

*புதுடெல்லி, நவ.14-*

*குற்ற வழக்குகளில் கைதாகி 30 நாட்கள் சிறையில் இருந்தால் அமைச்சர்களின் பதவியை பறிக்க வழிவகை செய்யும் மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதாவுக்கு எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், நாடாளுமன்றக் கூட்டுக்குழு ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. இந்நிலையில், இந்த மசோதாவை ஆய்வு செய்யும் வகையில் நாடாளுமன்றக் கூட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவை, காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் புறக்கணித்துள்ளன. பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் அப்ராஜிதா சாரங்கி தலைமையிலான 31 உறுப்பினர் குழுவை சபாநாயகர் அறிவித்துள்ளார். குழுவில் இடம் பெற்றுள்ள 28 பேர், பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.*